# பெண்ணிய மேலாண்மை கூறும் அணிகலன்கள்

**முனைவர் வா. சித்ரா**

**இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,**

**இரத்னவேல் சுப்ரமணியம் கலை அறிவியல் கல்லூரி,**

**சூலூர், கோயமுத்தூர். 641 402.**

1

**ஆய்வுச் சுருக்கம்**

மாற்றம் ஒன்றே மாறாதது, உலகம் தோன்றிய நாள் முதல் இன்றுவரை உலகம் பல்வேறு மாற்றங்களைப் பெற்று நிலைபெற்றிருக்கிறது. இன்றைய சமுதாயம் நாகரிகம், பண்பாடு, கலை, இலக்கியம், அறிவியல், பழக்கவழக்கம், வாழ்க்கை முறைகள் என அனைத்துத் தளங்களிலும் நாளுக்குநாள் பல்வேறு மாற்றங்களைப் பெற்று வருகிறது.

நாகரிகம் உச்சத்தில் இருப்பதாகக் கருதப்படும் இன்றைய சமுதாயச் சூழலில் விலையுயர்ந்த ஆடைகளும் ஆபரணங்களுமே ஒருவரை அழகுபடுத்த வல்லவை என்ற எண்ணம் பரவலாகக் காணப்படுகிறது. மனமெல்லாம் மாசு படிந்து, புறத்தோற்றத்தில் புனிதராக வலம் வருபவர்கள் ஏராளம்பேர். ஆனால், வாழ்வாங்கு வாழும் நெறிமுறைகளை உலகிற்கு வகுத்தளித்த திருவள்ளுவர், ஒரு மனிதனுக்குத் தேவையான அணிகலன்களை வரிசைப்படுத்தும் விதமே வேறு. அவற்றில் ஒருசிலவற்றை அணிந்து கொண்டாலே பேரழகு கிடைத்துவிடும். வள்ளுவர் கூறும் அணிகலன்களை பெண்ணிய மேலாண்மையியலில் விரிவாக ஆய்வுசெய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

**திறவுச்சொற்கள்:** குறள் கூறும் அணிகலன்கள் உயிருக்கு அணி, உள்ளத்திற்கு அணி, கண், காது, நாவிற்கு அணி, இல்லறத்திற்கு அணி, சான்றோர்க்கு அணி, அரசனுக்கு அணி, வாழ்விற்கு அணி,

**முன்னுரை**

எல்லாக் காலத்திற்கும் எல்லா இடத்துக்கும் ஏற்ற மாசற்ற நல்ல கருத்துகளை வழங்கிக்கொண்டே இருக்கும் பெரிய மெய்யறிவுச் சுரங்கமாகத் திருவள்ளுவரின் திருக்குறள் திகழ்கிறது. திருக்குறள் கருத்துகள் இன்றைய உலகப் பெரும் தீமைகளை எல்லாம் தீர்க்கவல்ல ஒரே மாமருந்து ஆகும். இந்த உலகில் பிறந்த ஒவ்வொரு உயிரினத்திற்கும் ஒரு வாழ்க்கை முறைமை உண்டு. ஓர்றறிவு முதல் ஆறறிவு வரை அனைத்து உயிர்களுமே தமக்கென்று ஒரு வாழ்வைக் கொண்டிருக்கின்றன. அதிலும் சிந்தித்துச் செயலாற்றும் தன்மை கொண்ட, ஆறறிவு பெற்ற மனித இனத்தின் வாழ்வு மற்றவற்றைவிட மேம்பட்டதாகவே உள்ளது.

மனிதன் இந்த மண்ணில் நல்லவண்ணம் வாழ, வாழும் முறைமையை, நெறிகளை எடுத்துக் கூறும் அற இலக்கியங்களில் திருக்குறளுக்கு இணையான நூல் எதுவுமே இல்லை எனலாம். 'நற்குணங்களே ஒருவரை அணிசெய்ய வல்லன' என்ற ஆழமான, நுட்பமான கருத்து திருக்குறளில் பெறப்படுகின்றது.

**குறள் கூறும் அணிகலன்கள்**

**உயிருக்கு அணி**

இவ்வுலகில் ஒரு மனிதன் வாழ்கிறான் எனில், அவன் உயிரோடு இருக்கிறான் என்று பொருள். அந்த உயிரை அழகுபடுத்திப் பார்க்க வேண்டும் என்ற சிநதனை யாருக்குமே வருவதில்லை. ஆனால், வாழ்வின் அடிநாதமாக விளங்கும் உயிருக்கு அழகூட்டும் அணிகளை வள்ளுவர் தெளிவாக விளக்குகிறார்

காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனினூங்கு இல்லை உயிர்க்கு (குறள். 122)

மேற்கண்ட இந்தக் குறளில், அடங்கிப்பணிதலைவிட பெருஞ்சிறப்பு உயிர்க்கு வேறு இல்லை. எனவே, அடக்கத்தை உறுதுணையாகக் கொள்ளவேண்டும் என்கிறார்.

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு (குறள். 231)

என்ற குறளில் வள்ளுவர் வாழ்வின் பயனை, தெளிவாக எடுத்துரைக்கிறார். பிறருக்குக் கொடுத்து உதவுதலும் புகழோடு வாழ்தலும் உயிர்வாழ்தலின் பயன் என்கிறார்.

**உள்ளத்திற்கு அணி**

ஓவ்வொரு மனிதனிடமும் எல்லா நல்ல ஆற்றல்களும் விளங்குகின்றன. அதேபோல தீய சக்திகளும் மலிந்து கிடக்கின்றன. சான்றோர் சொல்லியபடி மனதைக் கவனிக்காமல் விட்டுவிட்டால் சுயநலம், பொறாமை, பேராசை, கோபம் போன்ற குப்பைகள் மலிந்துவிடும். தூய்மையான எண்ணங்களை உள்ளம் முழுவதும் நிரப்பி வைத்துவிட்டால் அங்கு குப்பைகளுக்கு இடமிருக்காது.

புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும். (குறள். 298)

பிறருக்குத் தீங்கு தராத, துன்பம் தராத சொற்களைப் பேசுவதே வாய்மை (குறள். 291) எனக்கூறும் வள்ளுவர், உள்ளத் தூய்மை வாய்மையால்தான் கிடைக்கும் என்கிறார்.

“வெளித்தோற்றத்தில் அப்பழுக்கில்லாமல் காட்சி
தரும் வாழ்க்கையை உருவாக்கவே மக்கள்
முனைகின்றனர். ஆனால், வாழ்க்கையின் தரமோ
அகத்தூய்மையால்தான் நிர்ணயிக்கப்படுகிறது”[1]

என்ற சத்குரு ஜக்கி வாசுதேவின் கூற்று இங்கு நோக்கத்தக்கது.

“நம் புலன்களே நம்மை வேட்டையாடி
வீழ்த்த மனமே காரணம்”[2]

என்பதால் மாசற்ற மனம் பேணுவது நல்வாழ்விற்கு வழிவகுக்கும்.

**கண், காது, நாவிற்கு அணி.**

இந்த உலகம் அழியாமல், மக்கள் நலமுடன் வாழ்வதற்கான காரணம் அன்புநோக்கு என்னும் அழகிய தன்மையே ஆகும் (குறள். 571) என்கிறார் வள்ளுவர். ஒருவர் கண்கள் பெற்றிருப்பதன் பயனே அன்பு நோக்குதான் என்று வலியுறுத்தும் வள்ளுவம்,

கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் அஃதின்றேல்
புண்ணென்று உணரப் படும் (குறள். 575)

என்று கண்ணிற்கு அணிகலன் அன்பும் கருணையும் கொண்ட கண்ணோட்டம் என்றும் வலியுறுத்துகிறது.

“அன்பு சந்தோசம், பரவசம் காரணமாக உதிர்க்கும்
கண்ணீரால் உங்கள் கன்னங்கள் ஈரமாகாமல்
இருந்தால், நீங்கள் இன்னும் வாழ்க்கையின் சுவையை
அறியவில்லை என்று அர்த்தம்”[3]

சான்றோர் கூறும் அறிவுரைகளைக் காதால் கேட்டு, மனத்தில் இருத்தி, நற்செயல்கள் செய்யும் போதுதான் வாழ்க்கை முழுமை பெறுகிறது.

‘அனைத்துச் செல்வங்களிலும் செவிச்செல்வமே சிறந்தது’ எனக் கருதும் வள்ளுவர், கல்வி கேள்விகளால் பயனடையாத காதுகள், வேறு ஓசைகளைக் கேட்டுணர்ந்தாலும் அவை பயனற்றவை என்கிறார்.

காதிற்கான ஆபரணங்களைத் தேடித்தேடி அணியும் மனிதகுலம் வள்ளுவர் கூறும் ஆபரணம் எதுவென்றும் அறிந்துகொள்ளவேண்டும். அதுதான் நிலைத்த பயனைத் தரும்.

“எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும். (குறள். 416)

என்று முடிந்த அளவு நல்லனவற்றைக் கேட்கச் சொல்கிறார் வள்ளுவர்.

பிறருக்குத் துன்பத்தைப் தராத, பிறர் மனதை நோகடிக்காத எச்சொல்லும் இனிய சொல்லே. தனிவாழ்விலும் பொதுவாழ்விலும் இன்றைய அவசரயுகத்தில் இனிய சொற்களுக்கு இடமில்லாத நிலையைக் கண்கூடாகக் காணமுடிகிறது. சில நேரங்களில், தகாத, தீமை பயக்கும் சொற்கள் மிகப்பெரிய கலவரங்களுக்குக் கூட வித்திட்டுகின்றன. குடும்ப அமைப்பில் சொற்கள் தடித்ததால் சிதறிபோன உறவுகள் ஒட்டாமல் போவதற்கான காரணங்களை ஆராய்ந்தால், அதன் மூலகாரணமாக அமைவது ஒன்றுக்கொன்று பேசப்பட்ட சுடுசொற்களாகவே இருக்கிறது. இந்தச் சிக்கலுக்கான தீர்வு நாவிற்கான அணிகலனைத் தேர்ந்தெடுப்பதில் இருக்கிறது.

பணிவுடையான் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற (குறள். 95)

‘ஒருவருக்குக் கண்ணிலும், மூக்கிலும் கையிலும், கழுத்திலும் பூ.ட்டிக்கொள்ளும் அணி

ஆபரணங்கள் அல்ல. அழகு தருபவை பணிவுடைமை, இன்சொல் பேசுதல் இவையே ஆகும்' என்று உறுதிபட உரைக்கிறது வள்ளுவம்.

"தீயவற்றைப் பார்க்காதே
தீயவற்றைக் கேட்காதே
தீயவற்றைப் பேசாதே"[4]

என்ற மகாத்மா காந்தியின் அறிவுரை இங்கு ஒப்பிடத்தக்கது.

**இல்லறத்திற்கு அணி**

இல்லறம் நல்லறமாக மலர தேவையானவை எவை என்ற புரிதல் இன்றியே இன்றைய பெரும்பாலான இல்லறங்கள் இனிப்பதில்லை. பணமும் பகட்டும் ஆடம்பரமும் பொருள் நுகர்ச்சியுமே இல்லறத்திற்கு இனிமை கூட்டா.

அன்பும் அறனும் உடைத்தாயின்இல் வாழ்க்கை
பண்பும் பயனும் அது. (குறள். 45)

என்ற குறளில் வள்ளுவர் இல்லறத்திற்கு அணியென்று அன்போடு நல்வழியில் செல்வதையே குறிப்பிடுகிறார்.

மேலும்,

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றுஅதன்
நன்கலம் நன்மக்கட் பேறு (குறள். 60)

என்று, வாழ்வுக்கு அழகாவது, அணியாவது மனைவியின் புகழத்தக்க குணமே என்றும் அத்தகைய புகழத்தக்க குணத்துக்குப் பெருமை போற்றற்குரிய நல்ல குழந்தைகளைப் பெறுதலே என்றும் தெளிவுபடக் கூறுகிறார்.

இல்லறத்தில் இருந்து பொருள் சேர்த்துக் குடும்பத்தோடு வாழ்வது எல்லாம் வரும் விருந்தினர்களைப் பேணி, வேண்டியவை செய்வதற்கே ஆகும். மனைமாட்சி மங்கலம் பொங்க வளர, விருந்தினர்களை இன்முகம் காட்டி உபசரிக்க வேண்டும்.

இருந்தோம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு. (குறள். 81)

என்ற குறள் 'விருந்து உபசரித்தல்' என்ற அரிய பண்பின் அவசியத்தை எடுத்துரைக்கிறது.

"அறவோர்க்களித்தலும் அந்தணரோம்பலும்....
விருந்தெதிர்க் கோடலும் இழந்தஎன்னை"[5]

என்ற கண்ணகியின் வருத்தம் வள்ளுவரையே வழிமொழிகிறது.

**சான்றோர்க்கு அணி**

சமமாக நின்று, பொருளின் தரமறிய உதவும் துலாக்கோல் போல நடுநிலைமை தவறாமல் நின்று பேசுதலே ஒருவற்குப் புகழ் தருவதாகும். நெஞ்சம் எப்போது நடுநிலைமை தவறுகிறதோ, அப்போது 'கெட்டழியும் காலம் வந்து விட்டது' என்பதை நாமே அறிந்து கொள்ளலாம்.

கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சாண்றோர்க் கணி (குறள். 115)

இன்ப துன்பம் இரண்டும் கலந்த இல்வாழ்வில் நடுநிலைமை தவறாமல் வாழ்வதே சான்றோர்க்கு அணிகலன் ஆகும். இதைத்தவிர மற்றோரு அணிகலனையும் சான்றோர்க்கு அணிவித்து அழகுபார்க்கிறார் வள்ளுவர்.

பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறன்ஒன்றோ ஆன்ற ஒழுக்கு (குறள். 148)

பிறன் மனைவியை விரும்பாத தன்னடக்கம் பெரியோர்க்கு நல்வழி என்பது மட்டுமல்ல: நிறைந்ஹ்த புகழ் வழியும் ஆகும்.

**அரசனுக்கு அணி**

ஒரு நாட்டின் வளமும் முன்னேற்றமும் அந்நாட்டை ஆளும் ஆட்சியாளர்களைப் பொறுத்தே அமைகிறது. மன்னன் எவ்வழியோ மக்களும் அவ்வழிதான்.

கொடைஅளி செய்கோல் குடிஓம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க்கு ஒளி. (குறள். 390)

இல்லையென்று வருவோர்க்குத் தருவதும், அன்பு செலுத்துவதும், ஆட்சிமுறை வழுவாதிருப்பதும், குடிமக்களைப் பாதுகாத்தலும் ஆகிய நான்கு குணங்களும் கொண்டவனே அரசரில் சிறந்த அரசனாவான்.

"அகத்தே கறுத்துப் புறத்து வெளுத்து
இருந்த உலகர் அனைவரையும் சகத்தே திருத்த"[6]

என்ற வள்ளலார் கூறுவதைப் போல, மனமெங்கும் பதவிமோகமும் பணஆசையும் அதிகாரவெறியும் இருட்டாக அடர்ந்து கிடக்க, புறத்தில் தூய வெண் உடையில் உலாவரும் ஆட்சியாளர்கள் வள்ளுவம் கூறும் நற்குணங்களை அணிகலன்களாக அணிந்திடில் நாடும் மக்களும் ஏற்றம் பெறுவர்.

**வாழ்விற்கு அணி**

'ஒழுக்கம்' என்ற ஒற்றைச்சொல் எத்தனையோ பொருள்களை உள்ளடக்கியதாக உள்ளது. ஒருவருடைய பழக்கவழக்கங்கள், பண்புநலன்கள், செயல்பாடுகள், விழுமியங்கள் ஆகிய அனைத்தின் தொகுப்பை 'ஒழுக்கம்' என்று கூறிவிடலாம்.

இந்த ஒழுக்கமானது ஒருவற்கு மேலான புகழையும் அனைத்துச் சிறப்புகளையும் தரவல்லதாகையால் ஒழுக்கத்தை உயிரினும் மேலானதாகக் கருதவேண்டும் என்பது வள்ளுவரின் அவா ஆகும். இன்பமான வாழ்விற்கு உற்ற துணையாக விளங்கும் ஒழுக்கமே அனைத்திலும் சிறந்த அணிகலன் ஆகும். இந்த அணியைப் பெற்றவருக்கு வாழ்வில் என்றும் துன்பம் வாராது.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். (குறள். 131)

என்று வாழ்விற்கு ஏற்ற அணியாக ஒழுக்கத்தைக் கூறுகிறது வள்ளுவம்.

"நல்ல குணங்கள் நம்மிடை அமரர்
பதங்களாம் கண்டீர் பாரிடை மக்களே"[7]

என்ற மகாகவி பாரதியின் கூற்றுக்கிணங்க நற்குணங்களை அணிகலன்களாக கொண்டு வாழ்ந்திருந்தால் துன்பம் இல்லை: எந்நாளும் இன்பமே ஆகும்.

**முடிவுரை**

எங்கெல்லாம் எப்படியெல்லாம் மானுட வாழ்வுக்கிடையே தர்மங்களை வலியுறுத்த முடியுமோ, அங்கெல்லாம் மானுட நீதிகளையும் வாழ்வியல் அறங்களையும் வலியுறுத்துகிறது வள்ளுவம்.

மனித வாழ்வு ஏற்றத் தாழ்வுகளைக் கொண்டதுதான். இன்பமும் துன்பமும் மாறி மாறி வருவதுதான் வாழ்வு. எது வந்தாலும் எது நடந்தாலும் பழிமட்டும் வரக்கூடாது 'ஆவியோடு காயம் அடியோடு போனாலும் பாவி என்ற நாமம் படையாதே' என்றனர் முன்னோர்.

புறத்தே அணியும் அணிகலன்கள் ஒருவற்கு வெறும் அழகை மட்டுமே தரவல்லன. ஆனால் ஒருவர் அகத்தே அணியும் அணிகலன்கள் அழகை மட்டுமல்ல் அமைதியையும் ஆனந்தத்தையும் நிலைத்த புகழையும் தரவல்லன. எனவே வள்ளுவம் பெண்ணிய மேலாண்மை கூறும் அக அணிகளை என்றும் அணிந்திருந்தால் வையகத்தில் வாழ்வாங்கு வாழலாம் என்பதில் ஐயம் ஏதுமில்லை.

**அடிக்குறிப்புகள்**

1. ஆயிரம் ஜன்னல், சத்குரு ஜக்கி வாசுதேவ், பக். 254, விகடன் பிரசுரம.ஹ்ஹ்
2. வாழ்க்கையே ஒரு வழிபாடு, இறையன்பு, பக் 60, விஜயா பதிப்பகம்.
3. ஆயிரம் ஜன்னல், சத்குரு ஜக்கி வாசுதேவ், பக். 254, விகடன் பிரசுரம்.
4. சத்தியசோதனை, மகாத்மா காந்தி.
5. சிலப்பதிகாரம், மதுரைக்காண்டம், கொலைக்களக்காதை, இராமையா பதிப்பகம், பக். 140.
6. வடலூர் வள்ளல் பெருமான் வாழ்வியல் சிந்தனைகள், பக்.67